**த. நா.ச.பே. எண் : 039** **நாள் : 29.06.2018**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்களின்
அறிக்கை – 29.6.2018

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளை இப்பேரவைக்கு அறிவிக்கின்றேன்.

வடகிழக்கு பருவமழை காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கின் விளைவாக அடையாறு, ஆரணியாறு, கொசஸ்தலையாறு, கூவம் மற்றும் கோவளம் ஆற்றுப்படுகைகளில், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள புறநகர் மற்றும் ஊரக பகுதிகளிலுள்ள குடியிருப்புகள் நீரில் மூழ்குகின்ற நிலைமை அவ்வப்போது ஏற்படுகின்றது.

அப்பகுதிகளில் வெள்ள தணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக நடப்பாண்டில் மாநில நிதியிலிருந்து 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். அதிக பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளைக் கண்டறிந்து, அப்பகுதிகளில் வெள்ளநீர் தங்கு தடையின்றி வெளியேற்றப்படும் வகையில், தொடர்புடைய ஏரிகளுக்கு இணைப்பு கால்வாய்கள் அமைத்தல், மூடிய கால்வாய்களை புனரமைத்தல், பாசனமில்லாத ஏரிகளை ஆழப்படுத்தி நீர்த் தேக்கங்களாக மாற்றுதல், வெள்ளக் கட்டுப்பாட்டு அமைப்பினை ஏற்படுத்துதல், உபரி நீர் கால்வாய்கள் மற்றும் சாலையோர கால்வாய்களை அகலப்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## செய்தி, மக்கள் தொடர்புத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

1. உலகத் தமிழர்களின் இதயங்களில் தங்க சிம்மாசனம் இட்டு அமர்ந்திருப்பவரும், திராவிட ஆட்சி தமிழ்நாட்டில் நிலை பெற வித்திட்டவரும், தன்னை ஈன்ற தமிழகத்திற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டி பெருமை சேர்த்தவருமான பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் அமைந்துள்ள அருங்காட்சியகத்தை புதுப்பித்தல், பதிக்கப்பட்டுள்ள கிரானைட் கற்களைப் புதுப்பித்தல், புல்வெளி சீரமைத்தல், மின் பணிகள் மற்றும் இதர புனரமைப்புப் பணிகள் 4 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

2. சமூக நீதிக்காக பாடுபட்டவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான மறைந்த மரியாதைக்குரிய திரு. ராமசாமி படையாச்சியார் அவர்களை பெருமைப்படுத்தும் வகையில், அவரது பிறந்த தினமான செப்டம்பர் 16ஆம் நாள் ஆண்டுதோறும் அரசு விழாவாக கொண்டாடப்படும்.

3. கலைமாமணி, பத்மஸ்ரீ, பத்மபூஷன், செவாலியே, தாதாசாகேப் பால்கே ஆகிய விருதுகளைப் பெற்று நடிகர் திலகம் என்று மக்களால் போற்றப்பட்ட மறைந்த திரு சிவாஜி கணேசன் அவர்கள் கலைத் துறைக்கு ஆற்றிய சேவையை போற்றிடும் வகையில், அவரது பிறந்த தினமான அக்டோபர் 1-ஆம் நாள் ஆண்டுதோறும் அரசு விழாவாக கொண்டாடப்படும்.

பத்திரிகையாளர்களின் நலனில் எப்போதும் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலேயே அவர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை அமல்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

4. பத்திரிகையாளர் பெற்று வரும் ஓய்வூதியத்தை 8 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாயாகவும், குடும்ப ஓய்வூதியத்தை 4,750 ரூபாயிலிருந்து 5 ஆயிரம் ரூபாயாகவும் கடந்த ஆண்டு மாண்புமிகு அம்மாவின் அரசு உயர்த்தி வழங்கியது. மேற்படி ஓய்வூதியம் பெறுவதற்கான பணிக்கொடையின் உச்சவரம்பு

மற்றும் பணிக்கால ஆண்டு வருமான உச்சவரம்பு, 2 லட்சம் ரூபாயிலிருந்து 3 லட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.

5. பணிக்காலத்தில் பத்திரிகையாளர்கள் கடுமையான நோயினால் பாதிக்கப்பட நேர்ந்தால், அவர்கள் சிகிச்சை மேற்கொள்ள ஏதுவாக பத்திரிகையாளர் நல நிதியம் மூலம் தற்போது வழங்கப்பட்டு வரும் 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி, ஒரு லட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.

## கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை

தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடப்பாண்டில் செயல்படுத்தவிருக்கும் அறிவிப்புகளை இப்பேரவையில் வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

1. உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா வாடிக்கையாளர்களை கவரவும், சந்தை வாய்ப்பினை பெருக்கவும், விற்பனை நிலையங்களை புதுப்பித்து நவீனமயமாக்கும் நோக்கில், சென்னை, கொல்கத்தா, திருச்சி மற்றும் தஞ்சாவூரில் செயல்பட்டு வரும் பூம்புகார் விற்பனை நிலையங்கள், ஒரு கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் புதுப்பொலிவு பெற அழகுபடுத்தப்படும்.

2. பூம்புகார் நிறுவனம் சார்பில் நடப்பாண்டு முதல், உலக அளவிலான கண்காட்சி (Handifest) ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடத்தப்படும். சர்வதேச வர்த்தக நிறுவனங்களான இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனம் (ITPO) மற்றும் கைவினை பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் (EPCH) உடன் இணைந்து இக்கண்காட்சி 2 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும். கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் கைவினைப் பொருட்களுக்கு மிகச்சிறந்த சந்தை வாய்ப்பு ஏற்படுத்துவதற்கும், வருவாய் பெருக்குவதற்கும், ஏற்றுமதி அதிகரிப்பதற்கும் மற்றும் அன்னிய செலாவணி ஈட்டுவதற்கும் இக்கண்காட்சி வழிவகுக்கும் என்பதை தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**